**<u>DEPOSITION OF WITNESS</u>**

**In the court of Sub Court, Eraniel**
**S.C.No.123/2022**
**Prosecution Witness - PW2**

| | |
|---|---|
| Name | : திரு. சுரேஷ் குமார். |
| Father's Name | : |
| Age | : |
| Calling | : |
| Village | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 13.08.2024

(A2, A3, A5, A7, are present. A1, A4, A6, A8 to A10 are absent. Petition U/s.317 Cr.P.C is filed and allowed).

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது மார்த்தாண்டம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். 02.05.2011 முதல் குளச்சல் காவல் நிலையத்தில் ஓட்டுனராக பணிபுரிந்த போது டி.என்.74 ஜி 0363 வாகனத்தின் ஓட்டுனராக பணிபுரிந்தேன். 17.10.2011 ம் தேதி நடந்த உள்ளாட்சி தேர்தலை ஒட்டி 16.10.2011 ம் தேதி ஆய்வாளர் அவர்களுடன் ரோந்து அலுவலராக பள்ளிமுக்கு, பீச் ஜங்சன், மரமடி, சைமன் காலனி, ஆகிய இடங்களுக்கு ரோந்து சென்று கொண்டிருக்கும் போது ஆய்வாளருக்கு ஒரு செல்போன் அழைப்பு வந்தது. அழைப்பை பேசி முடித்து ஆய்வாளர் அவர்கள் குளச்சல், பங்கு தந்தை திரு. ஸ்டீபன் அவர்கள் அழைத்தாகவும் பீச் ஜங்சனில் சுமார் 20 பேர் கூட்டமாக கூச்சல், குழப்பம் செய்வதாக என்னிடம் கூறினார். அந்த இடத்திற்கு போகுமாறு என்னை ஆய்வாளர் பிரபாகரன் என்னிடம் கூறினார். நான் உடனே பீச் ஜங்சனுக்கு சென்ற போது, பீச் ஜங்சனில் இருந்து தெற்கு நோக்கி போகும் ரோட்டில் 10, 15 பேர் நின்று கொண்டிருந்தார்கள். ஆய்வாளர் அவர்களைப் பார்த்து வண்டியில் இருந்த ஒலிப் பெருக்கியின் மூலம் நாளை உள்ளாட்சி தேர்தல் நடைபெறுகின்ற காரணத்தால், கூட்டம் கூடாமல் கலைந்து செல்லுங்கள் என்று கூறினார். அவர்கள் கலைந்து செல்லாமல், எலே போலீஸ் நாங்கள் கலைந்து போக மாட்டோம் என கூச்சல் போட்டார்கள். ஆய்வாளர் மீண்டும் 30 (2) போலீஸ் Act அமலில் இருப்பதால் கலைந்து

செல்லுங்கள் என்று கூறினார். மேலும் கலைந்து செல்லாததால் ஆய்வாளர் அந்த கூட்டத்தை பக்கத்தில் நடந்து போனார். அவர்களை கைது செய்ய முற்பட்ட போது கூட்டத்தில் இருந்த ஒருவர் ஆய்வாளரின் மார்பில் அடித்து சட்டையைப் பிடித்து கீழே தள்ளினார். நான் வாகனத்தை விட்டு இறங்கி ஆய்வாளரை காப்பாற்ற ஓடிப் போவதற்கு முன்பாக கூட்டத்தில் நின்றவர்கள், தாஸ் அவர்களை விடாதே, ஆய்வாளரை அடித்து கொன்று விடு என்று சொன்னார்கள். உடனே தாஸ் அருகில் இருந்த உருட்டுக் கட்டையை எடுத்து ஆய்வாளரை இத்தோடு செத்து தொலைந்து போ என்று கூறி கம்பால் ஆய்வாளரின் தலையில் அடிக்க முற்பட்ட போது ஆய்வாளர் அதை தனது வலது கையால் தடுத்தார். அதில் ஆய்வாளருக்கு கையில் வீக்கக் காயம் ஏற்பட்டது. நான் ஆய்வாளரை அடிக்காதீர்கள் என்று சத்தம் போட்டு ஓடவே எதிரிகள் தெற்குப் பக்கமாக ஓடி விட்டார்கள். தாஸன் அவர் கையில் இருந்த உருட்டுக் கட்டையை போட்டு விட்டு அவரும் தெற்குப் பக்கமாக ஓடி விட்டார். நான் ஆய்வாளரின் அருகில் சென்று பார்த்த போது ஆய்வாளர் வலது கால் முட்டில் இரத்தக் காயமும், வலது கை ஒடிந்து விட்டதாகக் கூறினார். நான் உடனே அவரை அழைத்துக் கொண்டு பினு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். செல்லும் வழியில் என்னை கட்டையால் அடித்தது தாஸன் என்றும், அந்த கூட்டத்தில் 3, 4 பேரை எனக்கு நன்றாகத் தெரியும் என்றும் ஆய்வாளர் கூறினார். நான் ஆய்வாளரை மருத்துவமனையில் சேர்த்து, காவல் நிலையத்திற்கும், உயரதிகாரிகளுக்கும் தகவல் கொடுத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள். சம்பவத்தில் அந்த கூட்டத்தில் இருந்த வில்சன், அருள் ஜிம்போ, ரோஷன் மற்றும் பலர் நின்றார்கள். சாட்சி, நான் குறிப்பிடும் எதிரி வில்சன் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை என்று கூறுகிறார்.

<u>1 முதல் 4 மற்றும் 6 முதல் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் சம்பவ சமயத்தில் குளச்சல், காவல் நிலையத்தில் தலைமைக் காவல் நிலையத்தில் பணியில் இருந்தேன். காவல் நிலைய வாகனத்தை ஓட்டுவேன். பொதுவாக தலைமைக் காவலரை ஓட்டுனராக பணிபுரிய அனுமதிப்பது இல்லை என்றால், சரியல்ல. நான் சம்பவ நாளில் சம்பவம் நடந்த காலகட்டத்தில் ஆய்வாளரின் வாகனத்தை நான் ஓட்டியதை உறுதி செய்ய, காவல் ஆய்வாளரின் வாகனத்திற்குரிய டைரியில் பதிவுகள் எழுதப்பட்டு இருக்கும். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால், தாக்கல் செய்து இருப்பார்கள். ஆய்வாளரின் வாகனத்தை நான் 02.05.2011 முதல் 2012 வரை ஓட்டினேன். சம்பவ சமயத்தில் நான்

அவ்வாறு ஆய்வாளரின் வாகனத்தை ஓட்டவில்லை என்றாலும், அதனால் தான் என்னால் வாகனத்தின் பதிவு எண்ணை சரியாக சொல்ல முடியவில்லை என்றால், சரியல்ல. சம்பவத்தன்று என்னிடம் விசாரணை செய்யும் போது சுமார் இரவு 08.00 மணி இருக்கும். 24.10.2019 ம் தேதி நான் இரண்டாவதாக கொடுத்த மறு வாக்குமூலத்தில் குளச்சல் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருவதாகவும் ஆய்வாளருக்கு வாகன ஓட்டுனராக இருப்பதாகவும் குறிப்பிட்டு இருக்கிறேன் என்றால், சரிதான். ஆனால் 2012 வரை தான் ஆய்வாளர் வாகனத்தை ஓட்டியுள்ளதால், நான் கொடுத்த மறு வாக்குமூலம் 24.10.2019 ற்கு முன்பாகவே தயார் செய்யப்பட்டு உள்ளது என்றால், சரியல்ல. எனது 24.10.2019 ம் தேதி மறு வாக்குமூலத்தில் எனக்கு நன்றாகத் தெரிந்த 6 நபர்களையும் மேலும் பெயர், விலாசம் கேட்டுத் தெரிந்த 4 நபர்களின் பெயர்களையும் குறிப்பிட்டிருக்கிறேன் என்றால், சரிதான். தற்போது அதற்கு முரண்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் சம்பவ இடத்தில் இல்லாத காரணத்தால் தான் பிறர் தயாரித்து தந்த வாக்குமூலங்களை சாட்சியாக நான் கூறுவதால் தான், 16.10.2011 அன்று கொடுத்த முதல் வாக்குமூலத்தில் ஒரு சிலரையும், பின்னிட்டு மறுவாக்குமூலத்தில் (24.10.2019) வேறு நபர்களையும் குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரியல்ல. நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள 3 எதிரிகளில் யாராவது தற்போது நீதிமன்றத்தில் இருக்கிறார்களா என்றால், அந்த 3 எதிரிகளும் நீதிமன்றத்தில் இல்லை. சம்பவ இடத்திற்கு மாலை 07.30 மணிக்கு சென்றோம். குளச்சல் பங்குத் தந்தை அ.சா.1 ஐ செல்போனில் அழைத்துக் கொண்டு வாகனம் சைமன் காலணியில் இருந்தது. அந்த இடத்தில் இருந்து சம்பவ இடத்திற்கு செல்ல 2 நிமிடங்கள் போதும். குளச்சல் பங்குத் தந்தை ஆய்வாளரை மாலை 07.30 மணிக்கு அழைத்தார். எனது மறுவாக்குமூலத்தில் இரவு 08.30 மணி என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரியல்ல. சம்பவ இடத்தில் நான் இல்லாத காரணத்தால் முதல் வாக்குமூலத்தில் ஒரு நேரத்தையும் மறுவாக்குமூலத்தில் வேறொரு நேரத்தையும் குறிப்பிட்டிருக்கிறேன் என்றால், சரியல்ல. எனது மறுவாக்குமூலத்தில் சம்பவ இடத்தில் மொத்தம் 10 நபர்கள் தான் என்று கூறியிருந்தால் அது சரியல்ல. 10 முதல் 15 நபர்கள் இருந்தார்கள். அ.சா.1 ஆய்வாளர் சம்பவ இடம் சென்றவுடன் எதிரிகளை கலைந்து செல்லுமாறு வாகனத்தில் இருந்து கொண்டே எச்சரிக்கை செய்தார். அந்த நேரத்தில் எதிரிகளுக்கும் எங்களுக்கும் இடையே சுமார் 25 மீட்டர் தூரம் இருக்கும். சம்பவ இடம் சென்றதும் ஆய்வாளர் எதற்காக இங்கு நிற்கிறீர்கள் என்று

கேட்கவில்லை என்றால், சரியல்ல. எதிரிகள் பேரணியோ, போராட்டமோ செய்ய அல்லது அவ்வாறு போராட்டம் செய்யும் எண்ணத்துடன், அதற்கான அனுமதி பெற்றிருந்தார்களா என்றால், இல்லை. இது பற்றி ஆய்வாளர் அவர்களை விசாரிக்கவில்லை என்றால், சரிதான். எதிரிகள் சம்பவ இடத்தில் என்னையோ, ஆய்வாளரையோ தாக்குவதற்கான எண்ணத்துடன் இல்லை என்றால், சரிதான். ஆய்வாளரை அடிக்க பயன்படுத்திய சவுக்கு உருட்டுக் கட்டையின் நீளம் சுமார் 1. 1/2 அடி இருக்கும். அகலம் சுமார் 9 இன்ச். சம்பவம் நடக்கும் போது நான் வாகனத்திற்குள் இருந்ததால் ஆய்வாளருக்கும் எதிரிகளுக்கும் இடையே என்ன பேசிக் கொண்டார்கள் என்ற விபரம் எனக்கு கேட்டிருக்காது என்றால், சரியல்ல. நான் ஆய்வாளரிடம் ஓடிவந்து அவரை காப்பாற்ற முயன்ற போது என்னுடன் சில தனி நபர்களும் வந்தார்கள். 16.10.2011 அன்று நான் கொடுத்த முதல் வாக்குமூலத்தில் நான் மட்டும் தான் அ.சா.1 ஐ காவல் வாகனத்தில் ஏற்றிக் கொண்டு சென்றதாக கூறியுள்ளேன் என்றால், சரிதான். அ.சா.1 ஆய்வாளரை இரவு சுமார் 07.45-08.00 மணிக்கு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். அ.சா.1 ஆய்வாளர் இறுதி வரை பினு மருத்துவமனையில் தான் சிகிச்சை எடுத்தார். மேல் சிகிச்சைக்கு வேறு எங்கும் செல்லவில்லை. சுமார் 3 நாட்கள் அங்கு சிகிச்சையில் இருந்தார். சம்பவத்தன்று என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தது கருங்கல், பொறுப்பு குளச்சல் காவல் நிலையம் சார்லஸ் கலைமணி என்பவர் என்றால், சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்திற்கு அருகே கடைகள், வீடுகள் மற்றும் ேஹாட்டல் உள்ள மனித நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால், சரிதான். சம்பவத்தை பொதுமக்கள் பார்த்தார்கள் என்றால், சரிதான். அ.சா.1 ஆய்வாளர் எங்களது காவல் நிலையத்தில் எனக்கு உயரதிகாரியாக பணியில் இருப்பதால் அவருக்கு ஆதரவாக நான் தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. அ.சா.1 ஆய்வாளர் சம்பவ தினத்தன்று மேற்படி சம்பவ இடத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களை துரத்த தனது வாகனத்தை விட்டு அவசரமாக இறங்கும் போது தவறி விழுந்த போது தான் நான் குறிப்பிடும் காயங்கள் ஏற்பட்டன என்றால், சரியல்ல. இதைப் பார்த்து அங்கிருந்தவர்கள் சிரித்து விட்டார்கள் என்பதால் அந்த ஊரில் இருந்தவர்களை பழிவாங்கும் எண்ணத்துடன் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் ஏதுமில்லை என்றாலும் நான் மேற்படி விபரங்களை மறைத்து, அ.சா.1க்கு ஆதரவாக தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

5ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

பங்குத் தந்தை ஸ்டீபன், அ.சா.1 ஆய்வாளருடன் பேசியது பற்றிய விபரம் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால், சரிதான். அ.சா.1 ஆய்வாளர் காயம்பட்ட நிலையில் அவருக்கு சிகிச்சை அளிக்க நான் அரசு மருத்துவமனைக்கு கூட்டிச் செல்லவில்லை என்றால், சரிதான். அவ்வாறு அரசு மருத்துவமனையை தவிர்த்து தனியார் மருத்துவமனைக்கு ஏன் அழைத்துச் சென்றேன் என்றால், பதற்றத்தில், பக்கத்தில் பினு மருத்துவமனை இருந்ததால் அங்கு அழைத்துச் சென்றேன். நான் சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் தெற்கு நோக்கி செல்லும் ரோட்டில் சென்ற போது சம்பவம் நடந்திருந்தால் அது சாலைக்கு கிழக்கில் நடந்திருக்கும் என்றால், சரிதான். 5ம் எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்மந்தம் ஏதுமில்லை என்றாலும், நான் அ.சா.1 ஆய்வாளருக்கு ஆதரவாக தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**